செ.வெ.எண்: 15 நாள்:09.03.2020

**கடன் அட்டை (Kisan Credit Card)**
**கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர்**
**திரு.த.அன்பழகன்.இ.ஆ.ப.அவர்கள் தகவல்**

கரூர் மாவட்டம் கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் விவசாயம் சார்ந்த கால்நடை வளர்ப்போருக்கு வங்கிகள் மூலம் கிசான் கடன் அட்டை மூலம் ரூ. 2 லட்சம் வரை கடன் அளவு தனிநபருக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதில் கரூர் மாவட்டத்தில் 2920 விவசாயம் சார்ந்த கால்நடை வளர்ப்போருக்கு கிசான் திட்டத்தின் கீழ் கடன் உதவி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆர்வமுள்ள கால்நடை வளர்ப்போர் http//www.pmkisan.gov.in என்ற இணையதளத்தில் படிவத்தினை பதிவிறக்கம் செய்தும் மற்றும் அருகில் உள்ள கால்நடை மருந்தக, கால்நடை உதவி மருத்துவரை அனுகி பெற்றுக்கொள்ளலாம். மேலும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் ஆதார் அட்டை நகல். வங்கி கணக்கு புத்தக நகல், 2 புகைப்படம் ஆகியவற்றை இணைத்து இத்திட்டத்தில் பயன் அடைய விருப்பமுள்ள விவசாயிகள் அருகில் உள்ள கால்நடை மருந்தக நிலையங்களில் படிவத்தினை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.